செய்தி வெளியீடு எண்: 436 நாள் : **31.7.2009**

## சென்னை அண்ணா பல்கலைக்கழகம்

## துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் மற்றும் அறிஞர்களுக்கு டாக்டர் பட்டம்

## **பொதிகை தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பு**

அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு சிறப்புப் பட்டமளிப்பு விழா **1.8.2009** சனிக்கிழமை மாலை **5.30** மணிக்கு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின், இசைமேதை திரு. ஏ.ஆர். ரஹ்மான், வானியல் அறிஞர் திரு. மயில்சாமி அண்ணாதுரை ஆகியோருக்கு மேதகு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்குகின்ற நிகழ்ச்சியை, சென்னைப் பொதிகைத் தொலைக்காட்சி **1.8.2009** சனிக்கிழமை மாலை **5.15** மணி முதல் விழா முடியும்வரை (மாலை **6.45** மணி வரை) நேரடியாக ஒளிப்பரப்புகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.